# 2017 நவம்பர் 20ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2017-11-20

கௌரவ திலங்க சுமதிபால, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவர் தலைமை வகித்தார்கள்.

## சபாநாயகரின் அறிவித்தல்கள்

'A' : அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலத்திற்கான சான்றுரை எழுதப்படல்

'B' : 2018 வரவு செலவுத்திட்டக் குழுநிலை நிகழ்ச்சி நிரலில் அமைச்சுகளின் செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்திற்கான திருத்தப்பட்ட தினங்கள்

## குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

## மனுக்களைச் சமர்ப்பித்தல்

(i) கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த
(ii) கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா
(iii) கௌரவ கனக ஹேரத்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

## சிறப்புரிமைக் கேள்விகள்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

திரு. அர்ஜுன் அலோசியஸ் உடன் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஐந்து உறுப்பினர்களுடனான உரையாடல் விபரங்களை வெளியிடுதல் தொடர்பானது

## தெரிகுழுக்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர் கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல அவர்களினால் பிரேரிக்கப்பட்ட பின்வரும் பிரேரணைகளை சபை ஏற்றுக் கொண்டது-

**(i) நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாரளுமன்றத்தின் தெரிகுழு**

பாராளுமன்றத்திற்கு இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காலஎல்லையை 2018 நவம்பர்

மாதம் 20 ஆம் திகதி வரை நீடிப்பு செய்வதற்காக

**(ii) வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிகுழு**

அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2016 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் காலஎல்லையை 2018 மே மாதம் 20 ஆம் திகதி வரை நீடிப்பு செய்வதற்காக

**<u>இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்</u>**

**(i) ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018) - குழு**

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (2018) ஒதுக்கப்பட்ட ஒன்பதாம் நாள் இன்றாகும். - " குழு நிலை விவாதம்"

(ii) **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்** (இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 2 ஆம் இலக்க விடயமாகக் காணப்படுவது)

சபையால் அங்கீகரிக்கப்பட்டன.

அதனையடுத்து, 1725 மணியளவில் பாராளுமன்றமானது 2017 நவம்பர் 21ஆந் திகதி செவ்வாய்க்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*